06.06.2023
O.S.No.154/2013

வா.சா.1 திரு.செல்வம் த.பெ.சுப்பிரமணி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.
பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. தாவா சொத்து எஸ்.நெடுங்குளம் கிராமத்தில் அமைந்துள்ளது. அந்த கிராமத்தில் தாவா சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எங்களுக்கு கிடையாது. நான் ஆவின் பாலகம் வைத்து நடத்தி வருகிறேன். விவசாயமும் செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் கட்டாணிபட்டி ஆகும். எனது பிராதன தொழில் விவசாயம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் கிரயம் பெறுவதற்கு முன்பு இந்த சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று கள ஆய்வு செய்தேனா என்றால் நான் விசாரித்து தெரிந்து கொண்டேன். நான் தாவா சொத்தை கிரயம் பெற்ற போது எனக்கு கிரயம் கொடுத்த சின்னகருப்பன் என்பவரின் அனுபவத்தில் இருந்ததாக தெரிந்து கொண்டேன். அந்த சின்னகருப்பன் என்பவர் ஒரு வழக்கறிஞர் என்றால் சரிதான். அவர் ஆரம்ப காலத்தில இருந்து மதுரையில்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவாசொத்தில் சின்ன கருப்பன் எந்த காலத்திலும் சொந்தமாக விவசாயம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக கிரயம் வாங்கும்போது நான் என்னென்ன ஆவணங்களை பார்வையிட்டேன் என்றால் கிரயதாரரின் பங்காளிகள் சம்பந்தபட்ட பாகபிரிவினை பத்திரம், கிரயதாரரின் பெயரில் உள்ள கூட்டுப்பட்டா ஆகியவற்றை நான் பார்வையிட்டேன். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் சின்னகருப்பனுக்கு எந்த அயிட்ட சொத்து ஒதுக்கப்பட்டு இருந்தது என்றால் "ஈ" செட்டியூல் சொத்து ஒதுக்கப்பட்டு இருந்தது. அந்த சொத்தில் தாவாசொத்தும் உள்ளடங்கியது.

2. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 8/3 ஆகும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 15 செண்டு ஆகும். அந்த 4 ஏக்கர் 15 செண்டையும்நான் கிரயம் பெற்றுக் கொண்டேனா என்றால் இல்லை, அதில் 1 ஏக்கர் 82 செண்டு மட்டும் தான் எனது கிரயதாரருக்கு பாத்தியப்பட்டிருந்தது, அதனால் நான் அதனை அப்படியே கிரயம் பெற்றேன். நான் வழக்கு தாக்கல் செய்த போது தாவா சொத்து பட்டா எண்.33ல் அடங்கி இருந்தது. அந்த பட்டாவானது கூட்டுப்பட்டாவாக சின்னகருப்பன் மற்றும் அவரது பங்காளிகள் பெயரில் தாக்கலாகி இருந்தது. தாவா சொத்தை நான் கிரயம் பெற்ற பின்பு எனது பெயருக்கு பட்டா மாறுதல் ஏற்பட்டுவிட்டதா என்றால் ஏற்பட்டு விட்டது. எந்த ஆண்டு என் பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டது என்றால், தேதி வருடம் ஞாபகம் இல்லை. 2020ம் ஆண்டுதான் என் பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்து 1 ஏக்கர் 82 செண்டு நிலமானது 3 துண்டுகளாக தலத்தில் உள்ளது. தாவா சொத்தின் மேல்புறம் சர்வே எண்.9ல் கட்டுப்பட்ட நிலம், கீழ்புறம் சர்வே எண்.8/3ல் பகுதி நிலம், தென்புரம் ஒத்தக்டை-திருவாதவூர் பிராதான சாலை, வடபுறம் சர்வே எண்.8/2ல் கட்டுப்பட்டுள்ள நிலம் உள்ளது. சர்வே எண்.8/2ல் உள்ள நிலம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் குறிப்பிட்டு யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது, ஆனால் எனது கிரயதாரர்களின் பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டது.

3. நான் தாவா சொத்தில் எப்போதாவது விவசாயம் செய்துள்ளேனா என்றால் நான் விவசாயம் செய்ய போன போதுதான் தகராறு ஏற்பட்டு எதிர்தரப்பினர் என்னை விவசாயம் செய்யவிடாமல்

தடுத்துவிட்டார்கள். எப்போது அவ்வாறு தகராறு நடைபெற்றது என்றால் 24.09.2012 ம் ஆண்டு நடைபெற்றது. 2012 ம் ஆண்டு முதல் தற்போது வரை நான் தாவா சொத்தில் விவசாயம் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல, எனது அனுபவத்தில் தான் இருந்தது. தாவா சொத்தில் பிரதிவாதிகள் தற்போது வரைதொடர்ந்து விவசாயம் செய்து அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. (பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)